முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்

# AA1 பரீட்சை – 2017 யூலை

# (AA15) வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்

(Business operations and management)

2017-07-23
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசித்தல் - 15 நிமிடங்கள்*
*எழுதுதல் - 03 மணித்தியாலம்*

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

(3) *பரீட்சைக்கு விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே*** *உங்களுக்குத் தரப்பட்ட* ***விடைப்புத்தகத்தில் விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *உங்களால் ஏதாவது எடுகோள்கள் எடுக்கப்பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச்சொல்லைக்*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள், செயல் வினைச்சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தை*** *அடிப்படையாகக்கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *தொடக்கம்* ***1.15*** *வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமக்குத் தரப்பட்ட விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பங்குடமை தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

(1) எழுத்துமூல உடன்படிக்கை ஒன்றைக் கொண்டிருப்பது கட்டாயமானதாகும்.

(2) பங்காளர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை 2 ஆகும்.

(3) நிதிக் கூற்றுக்களை வெளியிடுவது கட்டாயமானதாகும்.

(4) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

**1.2** பின்வருவனவற்றுள் நிறுவனமொன்றின் ‘‘பிரதான வியாபாரத் தொழிற்பாடு’’ எது?

(1) உற்பத்தி / செயற்பாடுகள் (2) நிதியும் கணக்கீடும்

(3) விற்பனையும் சந்தைப்படுத்தலும் (4) மேலுள்ள சகலதும்.

**1.3** பின்வருவனவற்றுள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கம்பனி ஒன்றைப் பதிவுசெய்வதற்குத் **தேவைப்படாத** ஒரு ஆவணம் எது?

(1) கம்பனிப் பதிவுப் படிவம்  (2) தொடக்கச் செயலாளரின் ஒப்புதல் கூற்று

(3) சங்கத்தின் நடைமுறை விதிகள்  (4) கம்பனியின் வங்கிக் கூற்று

**1.4** பின்வருவனவற்றுள் இலத்திரனியல் வர்த்தகத்தின் ஒரு வெற்றிக் காரணியாகக் கருதப்படுவது எது?

(1) தெரிவு மற்றும் பெறுமதி  (2) செயலாற்றல் மற்றும் சேவை

(3) பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மை  (4) மேலுள்ள சகலதும்

**1.5** பின்வருவனவற்றுள் இணையத்தின் ஒரு தனிப்பட்ட அம்சமாக (unique feature) இருப்பது எது?

(1) வழங்குநர்களை வாடிக்கையாளர்களுடன் இணைப்புச்செய்வது.

(2) தகவல் பகிர்வுக்காக மாத்திரம் பயன்படுத்த முடிவது.

(3) தனி ஒருவருக்குச் சொந்தமானதல்ல என்பது.

(4) வியாபார நிறுவனங்களால் மாத்திரம் பயன்படுத்த முடிவது.

**1.6** பின்வருவனவற்றுள் சேவைகளின் ஒரு பண்பியல்பாக (characteristic) ***அமையாதது*** எது?

(1) சேவைகள் கட்புலனாகக்கூடியன.

(2) சேவை வெளியீடு மாறக்கூடியது.

(3) சேவைகள் அழிவடையக்கூடியன.

(4) சேவைகள் உயர் வாடிக்கையாளர் தொடர்புகளைக் கொண்டுள்ளன.

**1.7** ஹென்றி மின்ஸ்பேக் (Henry Mintzberg) இன் கூற்றுப்படி, பின்வருவனவற்றுள் முகாமையாளர் ஒருவரின் வகிபாகமாக (role) ***அமையாதது*** எது?

(1) தீர்மானம்சார்ந்த வகிபாகம்  (2) தகவல்சார்ந்த வகிபாகம்

(3) எண்ணக்கருசார்ந்த வகிபாகம்  (4) நபர்கள்சார்ந்த வகிபாகம்

**1.8** பின்வருவனவற்றுள் தரவுக்கான (data) ஒரு உதாரணமாக அமைவது எது?

(1) ஊழியர் புரள்வு விகிதம்

(2) விலைப்பட்டியலிலுள்ள பொருளொன்றின் விற்பனை விலை

(3) மாதத்திற்கான மொத்த விற்பனைகள்

(4) மாதத்திற்கான இலாபம்

**1.9** பின்வருவனவற்றுள் வேலை விபரிப்பில் (Job Description) **உள்ளடக்கப்படாத** ஒரு கூறு (element) எது?

(1) வேலையின் நோக்கம்  (2) வேலைத் தலைப்பு

(3) ஆற்ற வேண்டிய பிரதான பணிகள்  (4) வேலை அனுபவம்

**1.10** பின்வருவனவற்றுள் மனித வலுத் (மனித வளங்கள்) திட்டமிடலின் ஒரு நோக்கம் **அல்லாதது** எது?

(1) எதிர்கால மனித வளத் தேவைகளை எதிர்வுகூறுதல்

(2) நெகிழ்வுத்தன்மையுடைய வேலைப்படை கிடைப்பதை உறுதிப்படுத்தல்

(3) திறன்கள் மற்றும் ஆற்றல்களைக் கொண்ட தேவையான அளவு ஆட்களை ஈர்த்துக் கொள்வதும் தக்கவைத்துக்கொள்வதும்

(4) வெகுமதிச் செலவினத்தைக் (reward expenditure) குறைத்தல்

**1.11** பின்வருவனவற்றுள் வியாபார நிறுவனமொன்றின் ஒரு அம்சமாக (feature) அமைவது எது?

(1) பொது இலக்கை நோக்கி வேலை செய்கின்ற ஒரு தொகுதி மக்கள் இருத்தல்.

(2) நோக்கு (vision) மற்றும் பணியினைக் (mission) கொண்டிருத்தல்.

(3) ஒரு கலாசாரத்தை பின்தொடரும் நிறுவனப் பெறுமானங்களைக் கொண்டிருத்தல்.

(4) மேலுள்ள அனைத்தும்.

**1.12** பின்வருவனவற்றுள் சந்தைப்படுத்தல் தத்துவத்தின் பரிணாமத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சந்தைப்படுத்தல் எண்ணக்கருவின் இறுதி நோக்கத்துடன் தொடர்புடைய சரியான கூற்று எது?

(1) உயர் உற்பத்தியினூடான உயர் இலாபங்கள்

(2) உயர் தரப் பொருட்களூடான உயர் இலாபங்கள்

(3) வாடிக்கையாளர் திருப்தியினூடான உயர் இலாபங்கள்

(4) உயர் விற்பனையினூடான உயர் இலாபங்கள்

**1.13** சந்தைப்படுத்தல் கலவை (4ps) இற்கிணங்க, கடன் தவணை (credit terms) உள்ளடக்கப்படுவது :

(1) இடத்தில் (2) பொருளில் (3) விலையில் (4) மேம்படுத்தலில்

**1.14** பின்வருவனவற்றுள் வெற்றிகரமான வணிகக்குறி (brand) ஒன்றின் பண்பியல்பாக அமைவது எது?

(1) நன்மைகள் (2) கலாசாரம் (3) பெறுமதிகள் (4) மேலுள்ள எல்லாம்

**1.15** பின்வருவனவற்றுள் பெறுமதி அடிப்படையிலான விலையிடலை விபரிக்கும் கூற்று எது?

(1) வாடிக்கையாளர்களால் பொருட்கள் அல்லது சேவைகளுக்கு எவ்வளவு பணம் செலுத்த முடியும் என்பதன் அடிப்படையில் விலையிடப்படுகிறது.

(2) பொருட்கள் அல்லது சேவைகளின் கிரய விலைக்கு மாறாத ஒரு சதவீதத்தை சேர்ப்பதன் மூலம் விலையிடப்படுகிறது.

(3) பொருட்கள் அல்லது சேவைகளுக்கு சந்தையில் நிலவும் விலையின் அடிப்படையில் விலையிடப்படுகிறது.

(4) தனது உத்தேசிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் அல்லது சேவைகளின் உணரப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் விலையிடப்படுகிறது.

***1.16*** *முதல்* ***1.20*** *வரையுள்ள வினாக்களின் இடைவெளிகளை நிரப்புவதற்கு அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொல் / சொற்களிலிருந்து சரியானதைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.16** ....................... *(வேலை வடிவமைப்பு (job Design) / வேலைப் பகுப்பாய்வு (job Analysis))* என்பது வேலை ஒன்றிற்குத் தேவைப்படும் கடமைகள் மற்றும் திறன்களைத் தீர்மானிக்கின்ற செயற்பாடு ஆகும்.

**1.17** ....................... *(நிலைப்படுத்தல் (Positioning) / சந்தைத் துண்டமாக்கல் (Market segment))* என்பது வாடிக்கையாளர்களின் மனதில் ஒரு வணிகக்குறி கொண்டுள்ள இடம் மற்றும் அவ்வணிகக்குறியை போட்டியாளர்களின் பொருட்களிலிருந்து அவர்கள் எவ்வாறு வேறுபடுத்துகிறார்கள் என்பவற்றுடன் தொடர்புடையதாகும்.

**1.18** ....................... *(அக இணையம் (Intranet) / புற இணையம் (Extranet))* என்பது நிறுவனத் திற்குள்ளே தகவலைப் பரிமாறிக்கொள்ளக்கூடிய, இணையத் தொழினுட்பத்தின் அடிப்படையில் அமைந்த ஒரு நிறுவனம்சார் வலையமைப்பாகும்.

**1.19** ....................... *(தீர்மான உதவி முறைமை (DSS) / நிறைவேற்று உதவி முறைமை (ESS))* என்பது தந்திரோபாய மட்ட தகவல் முறைமை ஆகும்.

**1.20** ....................... *(ISO 9001 : 2008 / ISO 9000 : 2005)* என்பது தர முகாமைத்துவ முறைமை ஒன்றின் தேவைப்பாடுகளை முன்வைக்கிறது.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

மக்களுக்குத் தேவையான பரந்தளவான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வடிவமைக்கப் படுகின்ற பல்வேறு வகையான தொழில்முயற்சிகள் வியாபார நிறுவனங்கள் எனப்படுகின்றன. வியாபார நிறுவனங்களை உடைமையின் அடிப்படையில் தனியுரிமை, பங்குடமை, கம்பனிகள், கூட்டுறவு மற்றும் முகவராண்மை என வகைப்படுத்த முடியும். வியாபார நிறுவனங்களின் வகையைப் பொருட்படுத்தாது, ஒவ்வொரு நிறுவனமும் அதனுடைய செயற்பாட்டு நடவடிக்கைகளைச் சீராக நடத்திச் செல்வதற்கு போக்குவரத்து, காப்புறுதி, தொடர்பாடல், வங்கியியல் போன்ற ஆதரவுச் சேவைகளைப் பயன்படுத்துகின்றன.

(a) தனியுரிமை வியாபாரம் ஒன்றின் பண்பியல்புகள் (characteristics) மூன்றினை (03) **விபரிக்குக.**
(06 புள்ளிகள்)

(b) வியாபார நிறுவனமொன்றுக்கு காப்புறுதியின் முக்கியத்துவத்தை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

ஒரு வெற்றிகரமான வியாபார நிறுவனம், வியாபாரச் சூழலில் ஏற்படும் மாற்றங்களை அடையாளங் காண்பது தேவையானதொன்றாகும். வியாபாரச் சூழலை அகச் சூழல் மற்றும் புறச் சூழல் எனப் பிரிக்க முடியும். சூழல் காரணிகளை அடையாளங்காண்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற பல்வேறு மாதிரிகள் காணப்படுகின்றன. அந்த வகையில் புறச் சூழல் காரணிகளை அடையாளங்காண்பதற்கு பயன்படுத்தப்படும் மாதிரிகளில் போட்டரின் ஐந்து படைகள் மாதிரியும் (Porter's Five Forces model) ஒன்றாகும்.

(a) (i) அகச் சூழலின் கூறுகள் (elements) மூன்றினைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(ii) பேரினச் சூழலுக்கும் (Macro Environment) நுண்பாகச் சூழலுக்கும் (Micro Environment) இடையிலான வேறுபாடுகள் மூன்றினை (03) **அடையாளங்காண்க.** (03 புள்ளிகள்)

(b) போட்டரின் ஐந்து படைகள் மாதிரியிலுள்ள ஏதாவது இரண்டு (02) படைகளை **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

மனித நடத்தையில் காணப்படும் உள்ளார்ந்த சிக்கல்கள் காரணமாக, எந்தவொரு நிறுவனத்திலும் மனித வள முகாமைத்துவமானது (HRM) ஒரு முக்கிய பங்கினை ஆற்றுகிறது. மனித வள முகாமைத்துவத்தின் பிரதான தொழிற்பாடுகளாக வேலை வடிவமைப்பு, வேலைப் பகுப்பாய்வு, மனித வலுத் திட்டமிடல், ஆட்சேர்ப்பு, தெரிவுசெய்தல், வேலைக்கு அறிமுகப்படுத்தல், செயலாற்றுகை மதிப்பீடு, பயிற்சி மற்றும் அபிவிருத்தி போன்றவை காணப்படுகின்றன.

(a) (i) ஆட்சேர்ப்பு (recruitment) மற்றும் தெரிவுசெய்தல் (selection) ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(ii) தெரிவுச் செயன்முறையுடன் (selection process) தொடர்புடைய படிமுறைகளை (steps) **அடையாளங்காண்க.** (04 புள்ளிகள்)

(b) உள்ளகரீதியான ஆட்சேர்ப்பிலும் பார்க்க வெளிவாரியான ஆட்சேர்ப்பில் கிடைக்கும் அனுகூலங்கள் மூன்றினைக் (03) **கூறுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

சந்தைப்படுத்தல் என்பது நுகர்வோரின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்காகத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் வழங்கும் செயன்முறையாகும். சந்தைத் துண்டமாக்கல் (Segmentation) என்பது சந்தைப்படுத்தலின் இணை எண்ணக்கருக்களில் (core concepts) ஒன்றாகும்.

(a) தேவைகள் (needs) மற்றும் விருப்பங்கள் (wants) ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை ஒவ்வொன்றுக்கும் இவ்விரு (02) உதாரணங்களுடன் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) பயனுறுதிமிக்க சந்தைத் துண்டமாக்கலின் பண்பியல்கள் (characteristics) மூன்றை (03) **விபரிக்குக.**

(06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**அக்ரோ புரொடக்ற் பி.எல்.சி.** என்பது விவசாய இயந்திரங்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள இலங்கை யிலுள்ள புகழ்பெற்ற ஒரு கம்பனியாகும். அண்மையில், **அக்ரோ புரொடக்ற் பி.எல்.சி.** ஆனது வேளாண்மை அறுவடையின் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நோக்கில் இயந்திரம் ஒன்றை விருத்தி செய்திருந்தது. இப்புதிய பொருளை (இயந்திரத்தை) அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் சந்தை ஆய்வு நடத்தப்படவில்லை. அத்துடன் மூலப்பொருட்கள் வழங்குநர்கள் பற்றியோ அல்லது இயங்குநிலை வாடிக்கையாளர்கள் பற்றியோ புதிய இயந்திரத்தை அறிமுகப்படுத்தும் வரை **அக்ரோ புரொடக்ற் பி.எல்.சி.** இன் **பொருள் விருத்திப் பிரிவானது, அக்ரோ புரொடக்ற் பி.எல்.சி.** இன் ஏனைய சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் தொடர்பாடலை மேற்கொண்டிருக்கவில்லை. **அக்ரோ புரொடக்ற் பி.எல்.சி.** முறையான கட்டளைகளின்றி புதிய இயந்திரங்களைத் தயாரித்திருந்தது. இத்தருணத்தில் புதிய இயந்திரங்களின் பாரிய இருப்பொன்று பேணப்பட்டது. பொருள் அறிமுகப்படுத்தப்பட்ட சில மாதங்களின் பின்னர், புதிய இயந்திரங்களில் தொழினுட்பப் பிரச்சினைகள் காணப்படுகின்றமை தொடர்பில் பல முறைபாடுகள் கிடைக்கப்பெற்றன. **பொருள் விருத்திப் பிரிவின்** செயற்றிட்ட முகாமையாளர் கம்பனியிலிருந்து ஏற்கனவே விலகியுள்ளார். இவ்விலகலுக்கான பிரதான காரணங்களாக வேலைப்பளு, புதிய பொருள் தோல்வியடைந்தமை, திருப்தியற்ற வெகுமதிகள் போன்றன காணப்பட்டமை விலகல் தொடர்பான நேர்காணலின்போது தெரியவந்தன. மேலும், **அக்ரோ புரொடக்ற் பி.எல்.சி.** இன் சந்தைப்படுத்தல் பிரிவினால், வாடிக்கையாளர்களால் எழுப்பப்பட்ட கவலைகளுக்கு தெளிவான பதில்களை வழங்க இயலவில்லை. சில கவலைகள் உயர் தொழினுட்பம் தொடர்பானதாக இருந்ததினாலும் அத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆற்றல்மிக்க நபர் இல்லாததினாலும் அத்தகைய கவலைகளுக்கு நீண்ட கால தாமதத்தின் பின்னரே பதிலளிக்கப்பட்டது. புதிய இயந்திரம் தொடர்பான இத்தகைய நீண்டகால தீர்க்கப்படாத பிரச்சினைகள் காரணமாக கம்பனியின் ஏனைய பொருட்களின் நற்பெயருக்கும் களங்கம் ஏற்பட்டதுடன் தற்போதைய பொருட்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் போக்கும் இறங்குமுகமாக இருந்தது. இறுதியாக, புதிய இயந்திரங்களை மீளப்பெற்றுக்கொள்வது என **அக்ரோ புரொடக்ற் பி.எல்.சி.** இன் முகாமை தீர்மானித்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) புதிதாக விருத்தி செய்யப்பட்ட இயந்திரத்தின் அறிமுகப்படுத்தல் தொடர்பில் **அக்ரோ புரொடக்ற் பி.எல்.சி.** எதிர்நோக்கிய பிரதான பிரச்சினைகளுக்கான காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) ஒரு புதிய பொருள் வடிவமைப்புச் செயன்முறையுடன் (product design process) தொடர்புபட்ட படிமுறைகளை (steps) **அடையாளங்காண்க.** (06 புள்ளிகள்)

(c) பயனுறுதிமிக்க வெகுமதி (rewards) முறைமை ஒன்றின் நோக்கங்கள் நான்கினைக் (04) **கூறுக.** (04 புள்ளிகள்)

கம்பனியானது புதிய இயந்திரம் பற்றி சந்தையிலுள்ள புலனுணர்வை அறிவதற்கு சந்தை ஆய்வு ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானித்திருக்கிறது. அது சந்தை ஆய்வை நடத்துகின்ற விடயத்தை வெளிமூலமிடுவதற்கு (outsource) தீர்மானித்திருக்கிறது.

(d) சந்தை ஆய்வு நடத்துவதை வெளிமூலமிடுவதன் ஊடாக பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் நான்கினைப் (04) **பட்டியலிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |